703
3.61.

REGISTERED No. M. 6165. க. பை. 13

# பத்ஹுல் இஸ்லாம்

# FATH-HUL-ISLAM

மாதப் பத்திரிகை.

செப்டம்பர்—1961.


| விஷயம். | பக்கம். |
|---|---|
| உஸ்வயே ஹஸனு என்னும் அழகிய முன்மாதிரி .... | 1 |
| ஷோபா தேவி (தொடர் கதை) (ஏ. ஆர். கமால்) | 7 |
| ஹஜ்ரத் க்வாஜா முஈனுத்தீன் ஜீவிய சரிதை (டி. எப். ஆர். மஆலி ஸாஹிப் பாகவி) ... ... | 15 |
| மடமையிலேறி விட்டான் (G. U. ஸெய்யத் அஹ்மது) ... ... ... | 19 |
| திருக் குர்ஆன் சாரசங்கிரஹம் (ரஹ்மத் பாகவி) | 21 |
| கண்ணால் பார்ப்பதும் பொய் (ஹாரிஸ் பாபு) ... | 27 |


இஸ்லாம் ஆபீஸ் :
...ஹரோட், திருவல்லிக்கேணி, மதரூஸ் 5.

SL
Q7m211p.N26ST
N61.
187086

# பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 1–50 |
| தனிப் பிரதி நயா பைஸா | | 0–13 |
| மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா | ரூ. | 2–00 |

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5


## மூளை பலத்தால் முன்னேறியவர்

இது ஹென்றி போர்ட் என்னும் ஒரு அமெரிக்கரின் ஜீவிய சரித்திர சுருக்கம். இவர் ஒரு சாதாரண மனிதராக இருந்து, பிறகு உலகத்திலேயே பெரிய பணக்காரராக விளங்கினர். இவர், தான் பணக்காரராக ஆனதுடன் அமெரிக்காவையே ஒரு செல்வ நிறைந்த நாடாக ஆக்கியவர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். பெரிய பணக்காரர்கள் மட்டும் அனுபவிக்கக் கூடிய ஒரு வஸ்தாக இருந்த மோட்டார் வண்டியை, சாதாரணமானவர்களும் உபயோகிக்கும்படி மலிவான விலைக்கு முதலில் விற்கும்படி செய்தவர் இவர் தான்.

இதன் விலை நயா பைசா. 20

கிடைக்குமிடம்:—
ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்.
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

# பத்ஹுல் இஸ்லாம்

செப்டம்பர்—1961.

## ‘உஸ்வயே ஹஸனா’ என்னும் அழகிய முன்மாதிரி

உலகத்தில் எத்தனையோ சீர்திருத்தகர்கள், மகான்கள், ரிஷிகள், தேசாதிபதிகள், மன்னர்கள், வீரர்கள் தோன்றினார்கள். அவர்களில் ஒவ்வொரு வரும் தத்தம் அறிவாற்றலுக் கேற்ப, செயற்கரிய காரியம் ஏதாவ தொன்றைச் சாதித்து, உலகில் நற்பெயர் பெற்றுத் தான் சென்றுள்ளார்கள்.

ஒருவர் உலக மக்களை அடக்கியாளும் பண்பாகிய அரசியல் துறையில் சிறந்து விளங்கி மாமன்னராக பெய ரெடுத்திருக்கலாம்;

மற்றொருவர், மகாயுத்தம் என்னும் போர்க்களத்தில் சேனாதி பதியாக இருந்து, ரத கஜ துரக பதாதி என்னும் நான்கு வகைப் படைகளையும் செவ்வனே நிர்வகித்து வெற்றி பெற்று ஜெயசீலராய் விளங்கியிருக்கலாம்.

இன்னொருவர், செல்வங் கொழித்தலாகிய பொருளாதாரத் துறையில் நிபுணராக இருந்து, உலகத்தாரின் செல்வ மெல்லாம் தம்மிடம் வந்து சேரும்படி வாணிபமோ பண்ட மாற்றமோ செய்து பெரும் செல்வச் சீமானாகி, மன்னாதி மன்னராகி மகிதலம்

போற்றும் வண்ணம் கொடை வள்ளல் என்று நற் பெயர் பெற்றிருக்கலாம்.

இன்னொருவர், நாடுநகரம் விட்டு ஆரண்யத்திலோர் ஆசிரமம் அமைத்துக் கொண்டு, ஆண்டி முதல் அரசன் வரை அனைவரையும் ஆங்கு வர வழைத்து, ஞானபோதனைகள் புரிந்து சிஷ்ய கோடிகளைப் பெருக்கிப் பெரும் முனிசிரேஷ்டர் என்று பெயர் பெற்றிருக்கலாம்.

இன்னொருவர் நாட்டில் நகரில் உலக மக்களோடே பழகி எளிய வாழ்வு வாழ்ந்து, உலகமக்களுக்கு அறிவு, அரசியல், அஹிம்சை, அன்பு, ஆண்மை முதலிய துறைகளில் பேசியும் எழுதியும் உபதேசம் புரிந்தும் வழி காட்டிப் பிறகு மகாத்மா என்று பெயரும் பெற்றிருக்கலாம்.

மற்றொருவர், சீரும் சிறப்பும் மிக்க மன்னர் குலத்தில், மன்னன் மகனாகப் பிறந்து, பின்னர் மன்னாதி மன்னனாக விளங்கி, இவ்வுலக ஆடம்பர வாழ்வையும் ஆபாசச் செயல்களையும் வெறுத்துத் தள்ளி, அரசர்க்குரிய ஆடை யாபரணங்களைக் களைந்து, மர உரி தரித்து துறவி கோலங் கொண்டு ஜடைமுடி வளர்த்து மகரிஷியாய் விளங்கி, போத மரத்தடியில் அமர்ந்து லோக மக்களுக் கெல்லாம் ஞானோபதேசம் புரிந்து பகவானாக விளங்கி யிருக்கலாம்.

இவ்வாறே இன்னொருவர், தம் நாட்டு எளிய மக்களின் இழிந்த வாழ்வைக் கண்டு வீறு கொண்டு எழுந்து 'இத்தரணியில் ஏழை என்றும் பணக்காரர் என்றும் எவனும் பிறப்ப தில்லை; எவனும் யாருக்கும் அடங்கி நடக்க வேண்டியதில்லை; எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்பது போன்ற சமத்துவப் பொதுவுடைமை வாதத்தைக் கிளப்பி புரட்சி உண்டு பண்ணி, தன் நாட்டை மேலான நாடாகச் செய்து சர்வாதிகாரி என்றும் ஜனாதிபதி என்றும் பெயர் பெற்றிருக்கலாம்.

இன்றொருவர் தான் கற்ற கல்வி யறிவின் மேன்பாட்டில் திளைத்து, கற்றோரும் மற்றோரும் மெச்சும் வண்ணம் பெருங்கலை யாராய்வு புரிந்து, பெரும் பெரும் கலா நூல்களும் சாஸ்திரங்களும் எழுதிக் குவித்து விட்டுச் சென்றிருக்கலாம்.

* * * *

இவை யெல்லாமும் தான், உலக மக்களுக்கு உரியவர் செய்யும் திருப்பணி என்று பாராட்டப்படுகிறது. இதனைச் சீர்திருத்தம் என்றும், ஆளும் திறமை என்றும், அரசியல் நிபுணத்துவம் என்றும், வீரப் பிரதாபம் என்றும், ஞானபோதம் என்றும், புரட்சிச் செயல் என்றும் கூறப்படுகிறது; சரித்திர ஏடுகளில் எழுதி வைக்கப்படுகிறது. பள்ளிக் கூடப் பாடங்களில் வற்புறுத்தி போதிக்கப்படுகிறது.

ஆனால், இத்தகைய புகழ் பெற்ற மகா புருஷர்களின் புகழ், சொற்பகாலம் இருந்து, பின்னர் மறைந்து மங்கிப் போய் விடு கின்றது. காரணம் என்ன வெனில்: அன்னோரின் சாதனைகளும் போதனைகளும் ஆற்றல்களும் எல்லா காலத்துக்கும் எல்லா தேசத்துக்கும் எல்லா ஜனங்களுக்கும் பொதுப் படையான பயன் தருவதாய், விசிராக்தியளிப்பதாய், வேண்டற் பாலதாய் அமைந் தில் லாதுபோனமை யேயாம். அன்னோர் அங்ஙனம் வெற்றி பெற்ற வர்களாய் விளங்கி யிருந்த போதிலும், ஏதேனும் ஓரோர் துறையில் மட்டும் தான் வெற்றி பெற்றிருக்கலாம்: உதாரணமாக: வீரனாக விளங்கியவன் வீர சிகாமணியாகவும், மன்னனாக விளங்கி யவன் மன்னாதி மன்னனாகவும், புரட்சி புரிந்தவன் ஜனாதிபதி யாகவும், ஞானம் போதித்தவன் மகரிஷியாகவும், அஹிம்சை போதித்தவன் மகாத்மாவாகவும் மட்டும் தான் சேவித்து, நற்பெயர் பெற்று உலகத்தை விட்டு மறைந்து போயிருக்கலாம்.

ஆனால், மேற் கூறிய எல்லா அம்சங்களும் ஒரே ஒருவரிடம் அமைந்து, அன்னவர் சகல துறையிலும் அருஞ் செயல் புரிந்து, அனைவராலும் அண்ணல் என்று போற்றப்பட்டு, அன்று தொட்டு இன்று வரை புகழ் மங்காமல், கீர்த்தி மறையாமல், சேவை குன்றாமல், செயல் அழியாமல், உலகை உய்வித்த உத்தமராய், வாழ்க்கைக்கு வழி வகுத்த வல்லவராய், ஆத்மார்த்தத்துக்கு அறிவூட்டிய அண்ணலாய், அனைத்துலகத்துக்கும் அருள் புரிந்த பேருபகாரியாய் விளங்கியவர்— விளங்குபவர்— விளங்கப் போகிறவர் ஒருவர் உண்டென்றால் அவர் அரபு நாட்டு அனாதை, அரபு நாட்டு வியாபாரி, அரபு நாட்டு ஆத்ம ஞானி, அரபு நாட்டு சீர்திருத்தகர், அரபு நாட்டுப் போர் வீரர், அரபு நாட்டுத் தளபதி, அரபு நாட்டு வெற்றி சீலர், அரபு நாட்டுப் படிக்காத

மேதை, அரபு நாட்டு வேதாந்தி, அரபு நாட்டு அண்ணல், சர்வ லோக சீர்த்திருத்தகர், சகல லோக வழிகாட்டி, பல கோடி மக்களின் மனத்துறையும் மகானுபவரே. அவர் யாரென்றால், அவரே எங்கள் ரஹ்மத்துன்லில் ஆலமீன், அஹ்மத் முஜ்தபா, முஹம்மத் முஸ்தபா முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களாவர்.

இத்தனைச் சிறப்புக்களும் எம்பிரான் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு எப்படிப் பொருந்தி அமைந்து விளங்கியது என்பதை நாம் ஒவ்வொரு வரும் சிந்தித்துப் பார்க்க கடமை பட்டிருக்கிறோம்.

* * * *

உலகில் வாழும் எண்பது கோடி மக்களின் உள்ளங்களில் உறையும் உத்தம சீலர் முஹம்மத் (ஸல்) அவர்கள்: ஒரு மன்னன் வீட்டில் பிறக்கவில்லை; ஒரு மகரிஷியின் வீட்டில் ஜனிக்க வில்லை; ஒரு ஜனாதிபதியின் வீட்டில் அவதரிக்க வில்லை; ஒரு போர் வீரனின் வீட்டில் பிறக்க வில்லை; ஒரு பணக்காரனின் வீட்டில் உதிக்கவில்லை. பின் எப்படி இருந்தது அவரது பாலப் பிராயம்?

அரபு நாட்டில், மக்காவில், ஒரு சாதாரணக் குடும்பத்தைச் சேர்ந்த அப்துல்லாஹ் என்பவருக்கும்—ஆமினா என்பவருக்கும் ஒரு பிள்ளையாகப் பிறந்தார்; பிறப்பதற்குச் சில மாதம் முன்னரே தந்தை அப்துல்லாஹ் இறந்து போய்விட்டார். தாயார் ஆமினா அவ்வனாதைப் பிள்ளையை வளர்க்க வசதியில்லாமல், அரபு நாட்டு வழக்கம் போல், ஹலீமா என்னும் ஒரு செவிலித் தாயிடம் குழந்தையை ஒப்புக் கொடுத்து விட்டார்.

அனாதையாய், ஹலீமா விடம் வளர்ந்த அக்குழந்தை, அந்த அம்மையாரின் ஆடுகளை மேய்த்து வரும் ஒரு பையனாக ஆனார். அந்தப் பையன், மற்ற பிள்ளைகளைப் போல் பள்ளிக்கூடத்தில் படிக்க வைக்கப்படவில்லை.

பணக்காரப் பிள்ளைகளைப் போல் தனி உபாத்தியாயர் வைத்துப் பாடம் சொல்லிக் கொடுக்கப்பட வில்லை. முற்றும் வசதியற்ற ஓர் அனாதைச் சிறுவனாக, ஆடு மேய்க்கும் நல்ல பிள்ளையாகவே வளர்ந்து பெரியவரானார்—எங்கள் முஹம்மத் நபி அண்ணல்.

அதன் பிறகு வாலிப வயதில், தன் சிறிய தகப்பனர் அபூதாலிப் உடன் சேர்ந்து, வியாபாரத்தை யொட்டிச் செல்லும் காரவான், கூட்டத்தி லொருவாய் ஊர் ஊராய் அலேந்து பொருளிட்டும் தொழிலில் ஈடு பட்டார்.

அதன்பின், கதீஜா பிராட்டியார் என்னும் ஒரு பணக்கார விதவை யிடம், வியாபாரத்தை நடத்தும் காரியஸ்தராக சேவையில் அமர்ந்தார். இளம் வாலிபராக இருந்தும் அவர்; ஆசாபாசங்களில் ஈடுபட வில்லே; நம்பிக்கை யோடும் நாணயத்தோடும் நடந்து கொண்டார். படிப்பு வாசனே யற்றவராய் இருந்தும், அறிவுநுட் பத்தால் வியாபாரத்தில் பொருளீட்டி அதிக லாபம் திரட்டி தன் எஜமானியிடம் கொண்டு போய் ஒப்படைத்தார்.

கதீஜா என்னும் அந்த அம்மை அப்போது விதவையாக இருந்ததால், தமக்கு இப்படிப்பட்ட உத்தமத் துணேவரைத் தமது மணுளனுகவே தேர்ந்தெடுத்துக் கொண்டு ஆதரித்தார்.

* * * *

முஹம்மத் நபி, ஆடு மேய்க்கும் நல்ல பிள்ளேயாகவும், வியா பாரம் செய்யும் நல்ல இளேஞனுகவும் விளங்கியது போல, இல்ல றத்தை நன்முறையில் நடத்தும் நல்ல புருஷனுகவும் விளங்கினர்; பாத்திமா என்னும் செல்வக் குழந்தைக்குத் தந்தையாகவும் ஆனர்.

அண்ணல் நபிக்கு வயது 40 ஆயிற்று. உலக வாழ்க்கையை உள்ளறிவு கொண்டு சிந்திக்கலானர்; உலக மக்களின் அனுசாரச் செயல்களே அறிவு கொண்டு ஆராய்ந்தார்; மக்கள் அறி நெறி கெட்டு மாக்களாக வாழ்ந்து வருவதைக் கண்டு வெறுத்தார். உல கத்தை உய்விக்கச் செய்ய, என்ன செய்வ தென்று தீர்க்கா லோசனே செய்தார்; வீட்டில் வறுமையில்லாதிருந்ததால், சில நாட் களுக்கு வேண்டி உணவை எடுத்துக் கொண்டு 'ஹிரா' என்னும் குகைக்குள் போய், இறைவனேத் தியானித்து அருள் வேண்டிய அனவரதமும் பிரார்த்தனே புரிந்து தவம் இயற்றினர். இணேயிலா இறைவனின் இங்கிதமான அருள் கிடைத்தது; வஹீ வந்தது; ஞான போதம் கிடைத்தது; ஊற்று போல் அறிவு விருத்தியா யிற்று. அந்த வஹீயின் வாயிலாய் இறைவன் கட்டளேகள் போதனேகள் ஆயத்துக்களாக வெளிவந்தன.

"லாஇலாஹ இல்லல்லாஹ்; முஹம்மதுர் ரஸுலுல்லாஹ்" என்னும் தாரக மந்திரத்தை, நபியாகிய முஹம்மத் (ஸல்) அவர்கள், முதலில் தம் மனைவிக்கும், பிறகு தம்பி அலிக்கும், பிறகு மற்றவர்களுக்கும் போதிக்கலானார். இங்ஙனம் 'ஒரே நாயனை' நம்பி, திருத் தூதரைப் பின்பற்றும் ஈமான் முறையை எடுத்தோதினர். மூரட்டு அரபியர்கள் முதலில் எதிர்த்து நின்றனர்; பின்னர் அன்புக்கும் அருளுக்கும் பணிந்து ஈமான் கொண்டனர்.

மகான் முஹம்மத் நபியவர், ஆத்ம ஞானியாய் விளங்கியது போல், அரசியல் ஆற்றலும் வாய்ந் திருந்தார்கள். எனவே மக்காவை விட்டு மதீனாவுக்குக் குடியேறி அங்கும் இஸ்லாத்தைப் பரத்தினார்கள். சொற்ப காலத்தில், சுமார் 23-ஆண்டுகளில், இக்குவலய மெங்கும் இஸ்லாம் மதம் பரவுவதற்காக, அனுஷ்டானத்திட்டத்தை வகுத்துத் தந்தார்கள் எங்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்.

* * * *

தமது 63-ம் வயதில் இஸ்லாம் பரிபூரணத்துவம் அடைந்து விட்டது; உலக மெங்கும் இஸ்லாமியச் சூரியனின் இளங்கதிர் பரவத் தொடங்கியது; தம் கடமை பூர்த்தியடைந்த பின், இனி உலகில் தம் சிஷ்யர்கள் அக்கடமைகளைச் செவ்வனே நடத்துமாறு ஏற்பாடு செய்து விட்டு, அல்லாஹ்வின் திருச்சமுகத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள்—அண்ணல் நபி (ஸல்).

உலகில் மக்கள் எப்படி வாழவேண்டு மென்பதற்கு, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், "உஸ்வயே ஹஸனா" வாக, ஓர் அழகிய முன் மாதிரியாக விளங்கினார்கள். இந்த உந்நத நடை முறையாலேயே உலகத்துக்கு ஒரு 'புரோக்ராமை' ஏற்படுத்திக் கொடுத்துச் சென்றார்கள். அந்தப் புரோக்ராம் தான் குர்ஆன் ஷரீப்; இந்தச் செயல் முறைத் திட்டப்படி நடக்கும் வரை, முஸலிம்கள் உலகத்தில் சிறந்த சமூகமாய் "கைர உம்மத்தாய்" விளங்குவார்களென்பதில் சந்தேக மில்லை. வஸ்ஸலாம்.

# ஷோபா தேவி

## தொடர் நாவல்

"ஏ. ஆர். கமால்"

## 2

அக்கோதையின் கண்கள், தடாகத்தில் மலர்ந்துள்ள தாமரையைப் பழித்தன. அக்கங்கையின் நீண்டு வாயளவில் சாய்ந்துள்ள நாசி, கிளியின் மூக்கிற்கு உவமை கூறியது. அந்த எழில் அரசியின் குவிந்துள்ள இதழ்கள், நார்த்தங் கீத்துகளை நினைவிற்குக் கொண்டு வந்தன. அக்காரிகையின் கன்னங்கள், 'மக்மல்' என்னும் ஒருவகை மிருதுவான பட்டும் என் எதிரில் தூசு என பறை சாற்றின. அந்த ஆரணங்கின் அகன்ற நெற்றி, கண்ணாடியைப் பார்க்க வேண்டுமானல் என்னைப் பார் என்று கூறாமல் கூறியது. அக்கன்னியின் கூர்மையான நீண்ட கொங்கைகள் இரண்டும், 'தையலே! உன் தனங்கள் இரண்டும் உன் துணைவனை கவரட்டும்" என்று இயேசு சொன்னாரே அதுதான் இது என ரகசியமாக அறிவித்தன.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானல் மதிவதனம் கொண்ட அம்மங்கையைக் கண்டு மன்னன் மதி மயங்கினன். சபலம் கொண்டு அவன் உள்ளம் சலசலத்தது. இவளைப் போன்ற ஒரு சந்திர வதன சுந்தரியை இதுவரை பார்த்ததில்லை என்ற பிரமை ஒன்று மன்னன் மனதைக் கலக்கியது

அந்த 'ஊர்வசி'யின் உடல் அழகிலே உணர்வு இழந்து விட்ட மன்னன், "தாய்மை பருவத்தை தான் கட்டாயமாக அடையக் கூடும்" என்று அவள் நெற்றியில் எழுதி இருப்பதாக உணர்ந்தான். 'அவள் இல்லையேல் இனி தானும் இல்லை' என்ற அளவு அந்த மதிவதனம் மங்கைமீது "மன்னன் மோகங் கொண்டான்."

அத்துடன் அவளை எப்படியும் அடைந்தே தீர வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டான். 'அவளுக்காக இந்த ராஜ்ஜியத்தையும் பணயம் வைக்க நேரிட்டாலும் பின்னடைய மாட்டேன்' என உறுதி கொண்டான்.

ஆகவே, "அவள் யார்? எங்கிருப்பவள்? அவள் பெயர் என்ன? அவள் பெற்றோர்கள் யார்? அவர்கள் பூர்வீக வரலாறு என்ன?" எல்லாவற்றையும் விவரமாக அறிந்து வரும் படியாகவும், அவள் மீது தான் மோகங் கொண்டு விட்டதாகவும் அவளைத் திருமணம் செய்து கொள்ள நாடுவதாயும் அவள் பெற்

ரோர்கள் இடத்தில் சொல்லி, அவர்கள் பதில் சொல்வதையும் உடனே வந்து அறிவிக்கும் படியாக, தன்னுடன் வந்து கொண்டிருந்த மெய்க்காப்பாளனுக்கு ஆக்ஞை பிறப்பித்து விட்டு அரண்மனை நோக்கி வந்து விட்டான் அரசன் சாஹஸி.

## மனக் கோட்டைகள் இடிந்தன.

ஷோபாதேவி யாதவ குலத்தில் பிறந்தவள். தன் பெற்றோருக்கு ஏக புதல்வி அவள். ஆகவே அவள் தாய் தந்தையர் அவளை வெகு செல்வமாக வளர்த்து வாலிபமாக்கினர்.

ஷோபாதேவி தன் அத்தை மகனான சஹ்தேவ் என்பவனைத் தூய உள்ளத்தோடு காதலித்து வந்தாள். அவனும் இவள் மேல் உயிரை வைத்திருந்தான். தண்ணீர் கொண்டு வரும் சாக்கில் யாருக்கும் தெரியாமல் ஆற்றங்கரைக்குப் போகும் வழியில் எதிர் படும் மாந்தோப்பில் ஷோபாதேவி சஹ்தேவைச் சந்தித்து உரையாடி விட்டு வருவாள். இவர்கள் இருவரும் ரகசியமாக சந்திப்பதற்கு மூலகாரணம் இருவர் குடும்பத்திற்கு மத்தியில் பகை என்னும் பாரங்கல் ஏற்பட்டு இருப்பதே!

சுமார் ஐந்தாண்டுகளுக்கு முன் ஷோபாதேவியின் தந்தைக்கும் சஹ்தேவின் தாயுக்கும் சில்லறை தகராறு ஏற்பட்டது. மனைவிக்குப் பரிந்து பேசிக் கொண்டு வந்தார் சஹ்தேவின் தந்தை. அண்ணன் தங்கை பேசும் வரை நிலமை நன்றாகவே இருந்தது. மைத்துனரும் மைத்துனரும் மோதும் போது தான் நிலைமை மோசமாகி விபரீத விளைவுகளை எல்லாம் ஏற்படுத்தி விட்டன. அன்றில் இருந்து இரு குடும்பத்தினரும், கீரியும் பாம்பு மாக மாறி விட்டனர்.

இரு குடும்பத்திற்கு இடையில் பகை நிலவி வருவதை அறிந்தும் அதைப் பொருட் படுத்தாமல் ஷோபாதேவியும் சஹ்தேவும் காதல் வானத்தில் குதூகலத்துடன் பறக்கும் இளம் வானம் பாடிகளாக காதல் கீதத்தோடு பரவசத்துடனே ஆனால் யாருக்கும் தெரியாமல் ரகசியமாக பறந்து கொண்டிருந்தனர்.

அன்றும் ஷோபாதேவி, சஹ்தேவைச் சந்தித்துப் பேசி விட்டு அப்படியே தண்ணீர் எடுத்துக் கொண்டு போகத்தான் தண்ணீர் குடத்தை எடுத்துக் கொண்டு வந்தாள். அப்போது தான் சாஹஸீ மன்னன் அவளைப் பார்த்து அவள் ரூபலாவண்யத்தில் மயங்கி அவள் மீது மோகங் கொண்டான். தன்மீது அரசன் ஆசைபட்டான் என்று அவளுக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் மீண்டும் அவள் தன் வீட்டிற்கே வராமல் சஹ்தேவுடன் அப்படியே எங்கேயாகிலும் ஓடிவிட தீர்மானித்த வண்ணம் தன் காதலனை அணுகி இருப்பாள். 'அரசனால் தன் வாழ்வு அழியும்' என்று அறியாத காரணத்தால்தான் ஷோபாதேவி சற்று நேரம் அரசன் பவனி

வரும் அழகைப் பார்த்து ரசித்த வண்ணம் இருந்து விட்டு தன் காதலன் சஹ்தேவைச் சந்திக்க அந்த அடர்த்தியான மாந்தோப்புக் குள் நுழைந்தாள்.

“ஷோபா! ஏன் இன்று இவ்வளவு நேரம்?” ஷோபாதேவி வந்ததும் வராததுமாக இருக்கும் போதே பொறுமை யின்றி கேட்டான் சஹ்தேவ்.

“நான் வரும்போது நம் மஹா ராஜா குதிரைமீது ஊர்வலம் வந்து கொண்டிருந்தார். சற்று நேரம் நின்று பார்த்துக் கொண்டு இருந்தேன்.” ஷோபாதேவி செப்பினுள்.

“மஹா ராஜா ஊர் வலம் வருவதை இன்று தான் முதல் முறையாக பார்த்தாயோ?” மஹா ராஜாவின் ஊர் வலத்தை இதற்கு முன் பல முறை ஷோபா தேவி பார்த்து இருப்பாள் என்ற எண்ணத்தில் ஏளனமாகக் கேட்டான் சஹ்தேவ்.

“பின்ன என்ன? இதற்கு முன்னும் பார்த்திருப்பேன் என்று எண்ணுகிருயா? அரசர் அடிக்கடி ஊர் வலம் வருவதைக் கேள்வி தான் பட்டிருக்கிறேனே தவிர பார்த்ததில்லே சஹ்தேவ். உன்னேச் சந்திக்க வேண்டும் என்ற ஒரே காரணத்தை முன்னிட்டுத்தான் நான் இத்தண்ணீர் குடத்தைத் தூக்கிக் கொண்டு வெளியில் வருகிறேன். மற்றபடி வெளியில் வர எனக்கு என்ன வேலே இருக்கிறது? நான் உன்னேக் காதலிக்காமல் இருந்திருந்தால் தண்ணீர் எடுக்கக் கூட வெளியில் வா மாட்டேனே!” ஷோபாதேவி சொன்னுள்.

“அப்படியானுல் அரசனேக் கூட இன்று தான் முதல் முறை யாக பார்த்தாயாக்கும்!” சஹ்தேவ் கேள்வி குறிப்போடு செப்பினுன்.

“அதில் சந்தேக மென்ன! என் வாழ் நாளிலே இன்று தான் முதல் முறையாக அரசனேப் பார்க்கும் பாக்கியம் பெற்றேன்.”

“எப்படி இருக்கிருர் அரசர்?” சஹ்தேவ் கேட்டான்.

“அரசர் போல்தான் இருக்கிருர். ஆனுல் அவரைப் பார்க்க எனக்குப் பரிதாபமாக இருந்தது.” ஷோபாதேவி சொன்னுள்.

“ஏன்?” சஹ்தேவ் கேள்வி தொடுத்தான்.

“அவருக்குப் பின் அவர் பெயரைச் சொல்லவோ இக் நாட்டைப் பரிபாலிக்கவோ ஒரு பிள்ளே இல்லேயே என்று தான் பரிதாபப் பட்டேன்.”

“ஓஹோ! அப்படியானுல் அந்த அரசனுக்கு மூன்ரும் மனேவியாகி நீயே ஒரு பிள்ளேயைப் பெற்று கொடேன்!”

“சஹ்தேவ்! இன்று ஏன் உன் பேச்சு ஒரு மாதிரியாக இருக் கிறது?” ஷோபாதேவி சஞ்சலத்துடன் வினவினுள்.

“கடவுளின் நாமம் எழுதி இருந்த காகிதத்தை ஒரு நாஸ் திகன் நெருப்பில் போட்டு எரிக்கும் போது, ஆண்டவன் மீது அனுதாபங் கொண்டு பரிதாபப் பட்ட பக்தன் கதை மாதிரி

ஆண்டி வயிற்றிலே பிறந்த நீ, அரசன் மீது பச்சாதாபம் கொண்டாய் என்றால் அது சாதாரண விஷயமா? பொன்னெழுத்திலே பொறிக்கப் பட வேண்டிய விஷய மல்லவா அது?" சஹ்தேவ் கேலியாகக் கூறினன்.

"சஹ்தேவ்! அரசனுக்கு அரசனும், ஆண்டிக்கு ஆண்டியும் தான் பாசமும் பச்சாதாபமும் பட்டுக் கொள்ள வேண்டுமா? நாம் ஒரு பிரஜை என்ற முறையில்—ஏன்—நாமும் மனிதத் தன்மை கொண்ட மானிடர் என்ற முறையிலே, ஒரு மனிதனைப் பார்த்து, அவன் அரசனானாலும் சரி! ஆண்டியானாலும் சரி! பரிதாபம் கொள்ளக் கூடாதா? எந்த மன்னனின் நிழலிலே நாம் வாழ்கிறோமோ! எந்த மன்னனைப் பாசமுள்ளவன், பண்புள்ளவன், நீதி நேர்மை தவறாதவன், குடிமக்களின் நலனிலே அக்கறை கொண்ட கோமான் என்றெல்லாம் பாரிலுள்ளோர் போற்றிப் புகழ் பாடுகிறார்களோ! அந்தப் பாராளும் மன்னனுக்கு ஒரு பிள்ளை இல்லையே என்று நான் பரிதாபங் கொண்டது உன்னைப் பொறுத்த மட்டில் அது பாவமா? உண்மையிலே நீ இவ்வளவு குறுகிய மதியுள்ளவனா? அல்லது நம் பெற்றோர்களிடையே நிலவி வரும் பகையை நீயும் பாராட்டி அதன் காரணமாக என் காதல் தொடர்பைக் கத்தரித்து விடவேண்டும் என்ற எண்ணத்தால் பேசும் சாகஸ பேச்சா?"

"சஹ்தேவ்!! பெற்றோர்களின் பகையில் உண்மையாக நீயும் பங்கு கொண்டோ, அல்லது வேறு எந்தக் காரணத்தை முன்னிட்டோ நீ என் தொடர்பைத் துண்டிக்க நாடி இருந்தால் அதற்காக இவ்விதமான அகட விகட பேச்சுக்கள் பேச வேண்டிய அவசியம் இல்லை. தொடர்ச்சியாக மூன்று நாள் நீ இந்த மாந்தோப்புக்குள் என்னைச் சந்திக்க வராமல் நின்று விட்டால் நானே என் தொடர்பைத் துண்டித்துக் கொள்வேன்."

"சஹ்தேவ்!!! நான் உன்னைக் காதலித்ததற்குக் காரணம் என் மனம் உன்னை நாடியது என்பது மட்டுமல்ல. என் பெற்றோர்களுக்கு நான் ஏக புதல்வியானதால் என்னைச் செல்வமாக வளர்த்து நான் வேண்டுவதை எல்லாம் காலதாமத மின்றி கொடுத்து வருகிறார்கள் என்பது உனக்கும் தெரிந்து இருக்கும். இச்சலுகையின் பயனாகவே என் மணப் பேச்சு எழும்போது, நான் உன்னைத் தவிர வேறு யாரையும் என் மனச்சாட்சிக்கு விரோதமாக மணக்க மாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தால், என் பெற்றோர்கள் கட்டாயம் பகை மறந்து என்னை உனக்கே கொடுப்பார்கள். அதனால் இது நாள் வரை இரு குடும்பங்களுக் கிடையில் நிலவி வரும் பகை, பாசமாக மாறி, பரஸ்பர அன்பு அதிகமாகும் என்ற தூய எண்ணத்தையும் முன்னிட்டுத்தான் நான் உன்னை முழு மனதோடு காதலித்தேன். ஆனல் நீயோ பகையைப் பாசத்தால் மாற்று

வதற்குப் பதிலாக பகையை மேலும் வளர்க்கவோ அல்லது வேறு ஒரு பெண்மீது மையல் கொண்டோ..............'' ஷோபா தேவி பிரசங்கம் போன்ற தன் பேச்சை முடிக்க வில்லை. அதற்குள் குறுக்கிட்டு சஹ்தேவ் செப்பினன்:

“ஷோபா! நான் சொல்வது ஒன்று, நீ நினைப்பது வேறு! அரசனைப் பார்த்து நீ பிள்ளை இல்லையே என்று பரிதாபப் பட்டுக் கொண்டிருந்த அந்நேரத்தில், மன்னன் உன் மதிவதனம் கண்டு மோகங் கொண்டு உன்னை மூன்ரும் மனைவியாக மனங்குளிர்ந்து மணந்து கொள்ள முற்பட்டிருந்தால்..............''

“நான் மன்னனுக்கு மூன்ரும் மனைவியாக வாழ்க்கை பட நிச்சயமாக முடிவு செய்து இருப்பேன்!'' சஹ்தேவின் வார்த்தைகள் ஷோபா தேவிக்கு எரிச்சலை ஊட்டியது. எனவே, அவன் சொல்லி முடிப்பதற்குள் தன் மனச்சாட்சிக்கு மாருக பொறிந்து தள்ளினள்.

“ஷோபா! என் பேச்சு முழுவதையும் கேளாமல் ஏன் இப்படி ஆத்திரம் கொள்ளுகிருய்? உன் கூற்றுப்படி நான் பகையை வளர்க்க வேண்டும் என்ற எண்ணத்தாலோ அல்லது உன்மீது பாச மற்ற தனத்தாலோ நான் அப்படிப் பேச வில்லை. உன் மீது எனக்கு அளவில்லா ஆசை இருப்பதாலேயே நீ எங்கே என்னை விட்டு பிரிந்து விடுவாயோ என்ற அச்சத்தால் தான் அப்படி எல்லாம் பேசினேன். அது குற்றம் என்ருல் மன்னித்து விடு!'' சஹ்தேவ் வேண்டினன்.

“நான் உன்னை விட்டுப் பிரிந்து விடுவேன் என்று உன் மனதில் சந்தேகம் எழுந்ததற்குக் காரணம்?'' சஹ்தேவின் வேண்டு கோளுக்குத் தலை சாய்த்தவளாக ஷோபாதேவி அவனைக் கேட்டாள்.

“காரணம் இல்லாமல் இல்லை. சொல்லுகிறேன் கேள்! நேற்றிரவு நான் ஒரு கனவு கண்டேன். அதாவது பல நாள் போற்றி வளர்த்த ஒரு புள்ளி மானுடன் நான் தனித்த ஓர் இடத்தில் விளையாடிக் கொண்டு இருக்கும் போது, எதிர்பாரா விதமாய் எங்கிருந்தோ ஒரு புலி வந்து மான்மீது பாய்ந்தது. மானை மீட்பதற்காக நான் அப்புலியுடன் என்னல் இயன்றவரை போரிட்டுப் பார்த்தேன். ஆனல் மானை மீட்க முடிய வில்லை. புலி என்னை ரத்தக்களரியாக்கி குருதி வெள்ளத்தில் தள்ளி விட்டு மானைத் தூக்கிக் கொண்டு போய் விட்டது. நான் வீறிட்டு அலறியபடி கண் விழித்துப் பார்த்தேன். எங்கும் இருள் சூழ்ந்து இருக்கக் கண்டேன். அப்போதில் இருந்தே ஏதோ இனம் தெரியாத துயரமலை ஒன்று என் மனதில் விழுந்து நிம்மதியைப் பறித்துக் கொண்டது.''

“இன்று காலை கனவின் பலா பலன்கள் சொல்லும் ஒரு மஹானிடம் ராத்திரி நான் கனவு கண்ட விவரத்தைச் சொல்லி

அதன் பலனைச் சொல்லும்படி வேண்டிக் கொண்டேன். நான் கண்ட கனவைக் கேட்ட அம்மஹான் "உயிருக்குயிராய் நேசிக்கும் ஒரு பொருளை அண்மையில் நீ இழக்க நேரிடும். அதைத் திரும்பிப் பெற நீ சக்தி பெற மாட்டாய்" என்று கூறினார். அவர் கூறிய பயன் என் மனதிற்குத் திருப்தி அளிக்க வில்லை. ஆகவே, மற்றொரு மஹானிடம் போய் கேட்டேன். "உன்னால் எதிர்க்க முடியாத ஒரு பெரிய சக்தி வாய்ந்த பராக்கிரமசாலி, நீ எதன் மீது அதிக ஆசை கொண்டிருக்கிறாயோ அதே பொருளை அவன் அபகரித்துச் செல்வான்" என்று சொன்னார். அவர் சொன்னதிலும் எனக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. மூன்றாம் மஹான் ஒருவரிடம் மன்றாடிக் கேட்டேன். "அசைக்க முடியாத சக்தி ஒன்று உன் ஆசை கனவுகளை அண்மையில் அழிக்கக் கூடும்" என அறிவித்தார்."

"ஷோபா! நான் உயிருக்கும் மேலாக நேசிக்கும் பொருள் ஒன்று இவ்வுலகில் உண்டு என்றால்! நான் அனுதினமும் ஆசை கனவுகள் கண்டு ஆனந்த மடையக் கூடிய பொருள் ஒன்று இம் மானிலத்தில் உண்டு என்றால்!! என் பாச பாலால் போற்றிப் போற்றி பல நாளாக நான் வளர்க்கும் பொருள் ஒன்று இப்பாரில் உண்டு என்றால்!!! ஷோபா அது உன்னைத் தவிர வேறு யாதாகிலும் இருக்க முடியுமா?"

"நான் உயிருக்கும் உயிராக நேசிக்கும் பொருளைச் சக்தி வாய்ந்த ஒரு பராக்கிரமசாலி அபகரித்துக் கொள்வான் என்றால் அது இந் நாட்டு அரசனைத் தவிர வேறு யாராகிலும் இருக்க முடியுமா? இந் நாட்டு மஹா ராஜாவைத் தவிர வேறு எந்த சக்தி வாய்ந்த மந்திர வாதியானாலும் உன்னை என்னுடையவளாக ஆக்கிக் கொள்ள என் உடலில் ஒரு சொட்டு இரத்தம் இருக்கும் வரை எதிர்த்து போர் புரிவேனே!"

"மூன்று மஹான்கள் சொன்ன பலனும் ஒரு பொருள் கொண்டதாகத்தானே இருக்கின்றன. ஆசையாக நேசிக்கும் பொருள் என்றால் அது உன்னைத் தவிர வேறு யாருமில்லை. எதுவு மில்லை. எதிர்க்க முடியாத சக்தி அபகரித்துக் கொள்ளும் என்றால் அது மஹா ராஜாவே அன்றி வேறு யாரும் இருக்க முடியாது. இதன் காரணமாகத்தான் நீ மஹாராஜா வலம் வருவதைப் பார்த்துக் கொண்டிருந்தேன் என்று சொன்னதும் எனக்கு ஆத்திரமும் கவலையும் ஒருங்கே வந்து விட்டன."

"ஷோபா! இப்போது சொல்! நான் பகையை வளர்க்கக் கூடியவனா? அல்லது உன் மீது அன்பு இல்லாதவனா?? நான் பேசிய தெல்லாம் தவறுதானா???" சஹ்தேவ் கலங்கிய கண்களுடன் ஷோபா தேவியின் கரங்களைப் பற்றியபடி கேட்டான்.

"என்னை மன்னித்து விடு சஹ்தேவ்! உன் மனம் புண் படும்படி ஆத்திரத்தில் ஏதேதோ சொல்லி விட்டேன். அதை எல்லாம் மனதில் வைக்காமல் மறந்து விடு சஹ்தேவ்!" ஷோபா தேவி அவன் மார்பில் தன் முகத்தைப் புதைத்துக் கூறினாள்.

"ஷோபா! உனக்காகவே உயிர் வாழும் நான், நீ என்னதான் என்னைப் பேசினாலும் வதைத்தாலும் உன்மீது கிஞ்சிற்றும் கோபம் கொள்ள மாட்டேன் ஷோபா!" அவள் முகத்தைத் தழுவியபடி கூறினான் சஹ்தேவ்.

"நீ என்மீது அவ்வளவு அன்பு வைத்திருக்கிறாயா சஹ்தேவ்! உன்னுடைய இந்த பரந்த உள்ளத்திற்கு நான் என்ன கைமாறு செய்வேன்?" ஷோபாதேவி சொன்னாள்.

"வாழ் நாள் முழுதும் நீ என்னுடையவளாக இருந்து விட்டால் அதுவே நீ எனக்கு செய்யும் கைமாறு!" சஹ்தேவ் சொன்னான்.

"வாழ் நாள் முழுதும் நான் உன்னுடைய வளாகவே இருப்பேன் என்பதில் உனக்கு என்ன சந்தேகம் சஹ்தேவ்?"

"உன் உள்ளத்தைப் பற்றியோ அல்லது உன் தூய காதலைப் பற் பற்றியோ எனக்கு ஒன்றும் சந்தேகமில்லை ஷோபா! நான் கண்ட கனவும் அதன் பலனைச் சொன்ன மஹான்களின் கூற்றுப்படி நீ மஹா ராஜாவுக்கு மூன்றும் தாரமாக வாழ்க்கை பட்டு விட்டால்............"

"சஹ்தேவ்! இது எல்லாம் வீண் பிரமையே அன்றி என்னைப் பொருத்த மட்டில் உண்மை இல்லை. ஆகவே, அதெல்லாம் மனதில் வைத்துக் கொண்டு வீணாக சஞ்சலப்படாதே!" ஷோபா தேவி, சஹ்தேவுக்கு உபதேசம் செய்தாள்.

"இவையாவும் உண்மை இல்லாமல் பிரமையாக இருக்க வேண்டுமென்பது தான் என் ஆசையும். நீ சொல்கிறபடி இந்த எண்ணங்களை மனதில் இருந்து அகற்றி விடுகிறேன் ஷோபா! ஆனால் தர்க்கத்திற்காகிலும் சொல்! அம்மஹான்கள் என் கனவுக்குச் சொன்ன பலன் போல் நடந்து விட்டால் என்ன செய்வது? மஹா ராஜாவை எதிர்க்கும் அளவு நான் சக்தி பெற வில்லையே! அவரைத் தவிர அரசாங்கத்தில் எவ்வளவுதான் உயர்ந்த பதவிகளை வகிக்கும் வீர சூரபராக்கிரம சாலியாக இருந்தாலும் எதிர்த்து போராடு வேன்." சஹ்தேவ் நம்பிக்கை இழந்தவனாக நவின்றான்.

"உன் கூற்றுபடி அரசர் என்னை மணப்பதாயின் என்னால் இயன்ற மட்டும் என் உரிமைக்காக வாதாடி போர் புரிகிறேன். அரசர் அன்றி வேறு யாராகிலும் என்னை மணப்பதாயின் நீ போராடி என்னை மீட்டுக் கொள்! இந்தப் பேச்சை இத்துடன் நிறுத்திக் கொள்!" ஷோபாதேவி முடிவாக மொழிந்தாள்.

"ஷோபா! உன் பேச்சை நான் முழு மனதோடு ஆமோதிக்கிறேன். எப்போதும் உன்மனதில் என் நினைவு மட்டும் இருந்தால் போதும்!" சஹ்தேவ் சந்தோஷத்துடன் செப்பினன்.

"நீயும் எக்கோமும் உன் மனதில் என் நீங்காத நினைவுகளை வைத்திருப்பாயா?" ஷோபாதேவி கேட்டாள்.

"என்ன அப்படி கேட்டு விட்டாய் ஷோபா! உன் நினைவால் தானே உயிர் வாழ்கிறேன். என் உடலை விட்டு உயிர் பிரிந்தாலும் என் உள்ளத்தை விட்டு உன் நினைவு நீங்காது ஷோபா! அதோ செங்கதிர்களை வீசியபடி மலையின் அடிவானத்தில் மறைந்து கொண்டிருக்கிறனே சூரியன் அவன் மீது ஆணை."

"மங்காத நம் காதல் வாழ்விற்கு மறையும் பொருள் மீதுதானு ஆணையிட்டுக் கூறவேண்டும்?" ஷோபாதேவி அவன் வார்த்தையைக் குறை கூறினள்.

(தொடரும்)


# ஸுபுஹான மௌலூது
# இனிய தமிழுரை, பாடல்களுடன்

ஸுபுஹான மௌலூது பைத்துகளைத் தமிழில் மொழி பெயர்த்து அந்த மொழி பெயர்ப்பைப் பாடலாக எழுதப்பட்ட கிதாபு இது. ஒரு பக்கத்தில் ஸுபுஹான மௌலூதின் அறபு பைத்துகளும் அதன் எதிர் பக்கம் அந்த பைத்துகளின் பாடல் மொழிப் பெயர்ப்புமாக இருக்கிறது.

யாஸையிதீ, யாகுதுபா, யாஸையிதீ ஷைகீ, லுஸ்பில் இலாஹி ஆகிய பைத்துக்களின் தமிழுரைப் பாடல்களுடன் இணைக்கப் பெற்றுள்ளது. கிளேஸ் காகிதம் விலை ரூ. 1–60

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

# ஹஜ்ரத் 'க்வாஜா' முஈனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்கள் ஜீவிய சரிதை.

(டி. எப். ரஹ்மத்துல்லாஹ்–மஆலி சாஹிப் (பாகவி)

## 19—ம் பாகம்

### அதன் பின் என்ன ?

அதன் பின் என்ன ? பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலா யிற்று. சம்யுக்தைக்கு அவள், ராஜா பிரித்விராஜின் ராணியாகி விட்டாள்.

பிறகு பிரித்விராஜன், சம்யுக்தையை டில்லிக்குக் கொண்டு போய் பட்ட மகிஷியாக்கிக் கொண்டான்.

அதன் பின் தொடர்ந்து பல போராட்டங்கள் நடை பெற்றன. பிரித்வி ராஜனுக்கு பல திக்கிலும் எதிர்ப்பு. பல போர்க் களங்களை அவன் கவனிக்க வேண்டிய தொல்லையில் சிக்கிக் கொண்டான்.

சண்டைகள் நடந்த இடங்கள் கன்னூஜ், அஜ்மீர், பண்டேல் கண்டு, மீரட், அலிகட், மால்வா ஆகியவைக் குறிப்பிடப் படு கின்றன. எங்கும் பிரித்வி ராஜனுக்குத் தொல்லை தான்.

### சுல்தான் ஷஹாபுத்தீன் வெற்றி

ஹிஜ்ரீ 588-ல் சுல்தான் ஷஹாபுத்தீன் மன்னர் பிரித்விராஜன் மீது கடுமையாகத் தாக்குதல் புரிந்தார். இதில் முஸ்லிம் மன்ன ருக்கே ஜெயம் கிடைத்தது. பொதுவாக ஹிந்துஸ்தானத்தில், குறிப்பாக டில்லியில் இஸ்லாமிய மன்னர்களின் ஆட்சி ஏற்பட்ட தென்று சொல்லலாம். அப்போது, சுல்தான் ஷஹாபுத்தீனின் பட் டாளங்களில் ஒரு லக்ஷத்து 20 ஆயிரம் வீரர்கள் இருந்தனர். அவர்களில் காலாட் படை 80 ஆயிரம்; 40 ஆயிரம் குதிரை வீரர் களும் இருந்தனர்.

சுல்தான் ஷஹாபுத்தீனுக்கு ஜெயம் கிடைத்ததும், கிவாமுல் முல்க் ருக்னுத்தீன் ஹம்ஸா என்பவரை கவர்னராக அனுப்பி, பிரித்வி ராஜிடமிருந்து கோட்டையைக் கைப்பற்றினர்.

கடைசியாக, மெஞ்ஞான சொரூபர் க்வாஜா முஈனுத்தீன் அவர்களை அலக்ஷியம் செய்த பிரித்வி ராஜன் தப்புவதற்கு ஓடிக் கொண்டிருக்கும் போது, முஸ்லிம் வீரர்களால் உயிருடன் பிடிக்கப் பட்டு; பகிரங்கமாகவே கொல்லப்பட்டு மாண்டான்.

இங்ஙனம் காஜா கரீப் நவாஜ் அவர்களுடைய திருவாக்கு (பத்—துஆ, சாபம்) பலித்தது. முன்னறிவிப்பு உண்மையாக நிகழ்ந்தது.

## இந்தியாவில் இஸ்லாமிய அரசாங்கம்.

நமது ஞானச் சூரியன் கரீப் நவாஜ் காஜா முஈனுத்தீன் சிஷ்தி அவர்கள், ஹிந்துஸ்தானம் என்னும் இந்த இந்தியாவில், குப்ரியத்துடைய அராஜகம் நீங்கி இஸ்லாமியப் புனித அரசாங்கம் நிலவவேண்டு மென்று அபிலாஷை கொண்டிருந்தார்கள். அவ்வாறே அல்லாஹு தஆலா, ஹஜ்ரத் அவர்களுடைய நாட்டத்தை நிறை வேற்றி வைத்தான் போலும்.

ஹிஜ்ரி 589—ம் ஆண்டு (கி. பி. 1193—ம் வருஷம்) அஜ்மீர் நகரம் முழுதும் வெற்றிக் குள்ளாகி இஸ்லாமியர்களின் ஆதிக்கத்தில் வந்த பிறகு, ஸுல்தான் ஷஹாபுத்தீன் அவர்கள், இஸ்லாமிய மக்களின் பெரியாரும் ஸையிதுஸ் ஸாதாத்து மாகிய ஹஜ்ரத் ஸையித் ஹஸன் மஷ்ஹதீ அவர்களை, அஜ்மீருக்கு பிரதிநிதியாக (ரெஸிடெண்ட்) என்னும் பேரதிகாராக நியமித்து வைத்தார்கள்.

ஸெய்யித் ஹஸன் மஷ்ஹதீ அவர்கள், ராஜ்யாதிகாரம் தெரிந்தவராய் இருந்ததோடு, மஃரிபத் என்னும் மெஞ்ஞானத்தில் தேரியவராகவும், முத்தகீயாகவும் சன் மார்க்கப் பிரியராகவும் உத்தமராகவும் இருந்து வந்தார். இஃதன்றி இவர், நம் ஹஜ்ரத் காஜா முஈனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்களிடம் மிகப் பிரேமையும் அக்கீதாவும் உடையவராய் இருந்து வந்தார். ஆகையினல், ஸெய்யித் ஹஸன் மஷ்ஹதி அவர்கள், ராஜ்யாதிகாரம் நடத்திக் கொண்டிருந்த தோடு, தப்லீகுல் இஸ்லாம் என்னும் இஸ்லாமியப் பிரசாரமும் நல்ல முறையில் செய்து கொண்டு வந்தார்.

அதன் பின் ஹிஜ்ரீ 601—ல்(கி. பி. 1206—ல்) குத்புத்தீன் ஐபக் என்ற வீரர், இந்துஸ்தானத்துக்கு மன்னராக அமைந்து ஆக்ஷி முறை செய்து கொண்டிருந்தார். இவர், நான்கே ஆண்டுதான் அரசாக்ஷி புரியும் பேறு பெற்றூர். அதன் பின் காலச் சக்கரம் சுழன்று சம்பவம் மாறிப் போய் விட்டது.

அதன் பிறகு ஹிஜ்ரி 605—ல் (கி. பி. 1211—ல்) ஷம்ஸுத்தீன் அல்த் தமிஷ் என்பவர், ஹிந்துஸ்தானத்தின் மீது ஆதிக்கம் கொண்டு, அரசாங்கம் புரிந்து வந்தார்.

## ஹஜ்ரத் அவர்கள் டில்லி விஜயம்

ஷஹாபுத்தீன் உடைய காலம் முதல் ஸுல்தான் அல்த்தமிஷ் உடைய காலம் வரைக்கும், நம் ஹஜ்ரத் காஜா முஈனுத்தீன் சிஷ்த்தீ அவர்கள், அஜ்மீரில் தமது 'கான்காஹ்' வில் இருந்து

கொண்டு, ஞான போதனை செய்து கொண்டும் முரீதீன்களிடம் 'பைஅத்து' வாங்கிக் கொண்டும் இருந்து வந்தார்கள். அப்படி பைஅத்து வாங்கியவர்களில், ஸுல்தான் அல்த்தமிஷும் ஒருவர் என்பது ஈங்கு குறிப்பிடத் தக்க தாகும்.

இந்த ஸுல்தான் அல்த்தமிஷ்ஷுடைய ராஜ்யாதிகார காலத்தில், ஹஜ்ரத் க்வாஜா முஈனுத்தீன் சிஷ்தியவர்கள், டில்லி மாநகருக்கு வரவேண்டிய ஓர் அவசியம் ஏற்பட்டது. அதன் வரலாறு பின் வருமாறு:—

## ஒரு ஜமீன்தாரின் குறை

கொஞ்சம் நிலத்தை வைத்துக் கொண்டு விவசாயம் செய்து பிழைத்து வந்த ஒரு ஜமீன்தாரி முஸ்லிம், ஒருநாள், அஜ்மீரில் ஹஜ்ரத் கரீப் நவாஜ் (ஏழைத் தயாநிதி) காஜா முஈனுத்தீன் சிஷ்தீ (ரஹ்) அவர்கள் சமூகத்திற்கு வந்தார். ஞானோபதேசம் பெற்றுக் கொண்ட பின், ஹஜ்ரத் அவர்களிடம், ஒரு குறை இறைந்து விண்ணப்பம் செய்து கொண்டார். அதாவது:—

"ஹஜ்ரத்! டில்லியிலிருந்து வந்த அதிகாரி ஒருவர், ஏதோ காரணம் கூறி என்னுடைய ஜமீனை (நிலத்தை) ஜப்தி செய்து (பிடுங்கிக்) கொண்டார். இப்போது நில மின்றி ஏழ்மையில் வாடிக் கொண்டிருக்கிறேன். என் நிலத்தை திருப்பிக் கொடுக்கும்படி நான் மேற்படி அதிகாரியிடம் முறையிட்டுக் கொண்டேன். அதற்கு அவர், "ஸுல்தான் ஷாஹ் அல்த்தமிஷ்ஷிட மிருந்து உத்தரவு வந்தாலல்லாமல், உன் நிலத்தைத் திருப்பிக் கொடுக்க முடியாது" என்று சொல்லிவிட்டார். ஹஜ்ரத்! தாங்கள் தான் எனக்கு உதவி செய்யத் தகுதியுடையவர்கள். நில மில்லாமல் எப்படி நாங்கள் வயிறு வளர்க்கமுடியும்? என்னுடைய மனைவி மக்கள் பெருஞ் சங்கடத்தில் கிடக்கின்றனர். தாங்கள் எங்களை கரையேற்க வேண்டும். மேலும் சுல்தான் ஷாஹ் அல்த்தமிஷ், தங்களுடைய முரீதும் கலீபாவும் காமிலு மாகிய க்வாஜா குத்புத்தீன் பக்த்தியார் காக்கி (ரஹ்) அவர்களுடைய முரீது (சிஷ்யர்) என்றும் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆகையால் தான் தங்களிடம் வந்தேன். தாங்கள் ஷாஹ் அல்த்தமிஷிடம் எனக்கு சிபாரிஷ் செய்வீர்களாயின், நிச்சயமாக அந்தப் பறிபோன நிலம் மீண்டும் கிடைத்து விடும் என்று உறுதியாக நம்புகிறேன்" என்பதாகும்.

இந்த உருக்கமான விண்ணப்பத்தைக் கேட்டுக் கொண்ட ஹஜ்ரத் க்வாஜா சாஹிப் அவர்கள் "சரி, அப்படியே ஆகட்டும். நான் இந்தக் காரியத்தை முன்னிட்டே, உன்னுடன் டில்லிக்கு வருகிறேன்" என்று ஆறுதல் கூறினார்கள்.

## டில்லியில் சந்திப்பு.

நம் ஹஜ்ரத் க்வாஜா முஈனுத்தீன் சிஷ்தியவர்கள் ஒரு ஏழை விவசாயி யின் கஷ்டத்தை நீக்குவதற்காக, சிரமப்பட்டு அஜ்மீரை விட்டு டில்லிக்குப் பயண மானுர்கள்.

அஜ்மிரிலிருந்து ஞானச் சூரியன் கரீப் நவாஜ் க்வாஜா முஈனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்கள், ஏதோ காரணமாக டில்லிக்கு வந்திருக்கிருர்கள் என்ற செய்தியைக் கேள்விப் பட்ட ஸுல்தான் ஷாஹ் அல்த்தமிஷ், மிக பயபக்தி யோடு தமது குருநாதரின் குரு நாதராகிய பெரிய ஹஜ்ரத் அவர்களைத் தரிசிப்பதற்காக, தமது சிம்மாஸனத்தை விட்டு, ஹஜ்ரத் தங்கி யிருக்கும் புனித இடத்துக்கு வந்து சேர்ந்தார்.

முதலில் ஹஜ்ரத் அவர்களைக் கண்ணுல் தரிசித்து, கால்களை முத்த மிட்டு 'கதம் போஸி' செய்த பிறகு "ஹஜ்ரத்! குருநாதரே! தாங்கள் வழக்கத்துக்கு மாருக திடீ ரென்று இங்கு விஜயம் செய்ததன் காரணம் அறிய விரும்பு கிறேன்" என்று விண்ணப் பித்துக் கொண்டார்.

அதற்கு ஹஜ்ரத் அவர்கள், மேற்கூறிய ஏழை ஜமின் தாருடைய கஷ்டங்களை எடுத்துக் கூறி, அவரது நிலம் அவருக்குக் கிடைக்கவேண்டும் என்று ஆக்ஞை யிட்டார்கள்.

அதற்கு மன்னர், "என் குருநாதரே, இதற்காகவா தாங்கள் இவ்வளவு தூரம் சிரமப் பட்டு வந்தீர்கள்'? ஓர் ஊழியன் மூலம் சொல்லி யனுப்பி யிருந்தாலும், இதை நிறை வேற்றி யிருப் பேனே" என்று சம்மதம் தெரிவித்துக் கொண்டார்.

அதற்கு ஹஜ்ரத் அவர்கள், உபதேசம் செய்ததாவது:—

"கஷ்டப்பட்டு ஏழை எளியோர்களுக்கு உதவி செய்வதும், அதற்காக சிரமம் எடுத்துக் கொள்வதும் ஒரு வகையில் இபாதத்து தான்; இந்த நன்மையை நானும் அடைய வேண்டாமா? ஆகையால் தான் சிரமம் பாராமல் அஜ்மீரை விட்டு இங்கு ஓடி வந்தேன். நான் என்னுடைய கடமையைச் செய்து விட்டேன்; நீ உன்னுடைய கடமையைச் செய்" என்பதாகும்.

அந்த ஏழை ஜமீன்தார், தன் நிலத்தைத் திரும்ப அடையப் பெற்று, கஷ்டம் நீங்கித் திருப்தி யடைந்தார். சுருங்கக் கூறு மிடத்து, ஹஜ்ரத் க்வாஜா முஈனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்கள் சில நாள் டில்லியில் தங்கள் ஞானமாரிப் பொழிந்து, மக்களின் ஞானதாகத்தைத் தீர்த்த பிறகு பழையபடி அஜ்மீர் ஷரீபுக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

(தொடரும்)

# மடமையிலேறி விட்டான்

தொகுத்தவர்
G. U. ஸெய்யத் அஹ்மது

திரை:—பாவ மன்னிப்பு இசை:—வந்தநாள் முதல்

பிறந்த நாள் முதல் மறையும் நாள் வரை
கொள்கை மறக்க வில்லை—அவர்
பாபமும் பொய்யும் பணத்தாசையும்
பகுத்தறிவற்ற பேதங்களையும் ஒழித்த
நபியும் மாறவில்லை.

மனிதன் மாறி விட்டான்

நாள் மாற்றத்தால் குணமாறிட்டான்—அவன்
நாயன் பொய்யென்று கூறிட்டான்—தினம்
வாகனத்தை வானுக்கு அனுப்பிட்டான்—அது
வேதனை பழிக்கவே செய்திட்டான்.

மனிதன் மாறிவிட்டான்
மடமையில் ஏறி விட்டான்

மக்காவில் பிறந்தார்—மதினாவில் மறைந்தார்
மக்களின் மடமையால்—கல்லடி பட்டார்
எதிர்ப்பொலி பெற்றார்—அறிவொளி படைத்தார்
எதிர்ப்பொலி மறைத்தார்—அறிவொளி வளர்த்தார்

மனிதன் மாறிவிட்டான்
மடமையில் ஏறிவிட்டான்

ஆண்டவன் என்பது இஸ்லாமின் நீதி
குர்ஆன் என்பது முஸ்லிமின் ஜோதி
பாரில் நபிகள் படைத்ததெல்லாம்
பாவி மனிதன் மறந்து விட்டானே

மனிதன் மாறிவிட்டான்
மடமையில் ஏறிவிட்டான்

---

# நஸ்ஹுல் ஹதீது, வபத்ஹுல் மஜீது

புதிய மூன்றும் பதிப்பு

இவ்வுலகில் இன்ஸானுகப் பிறந்த ஒவ்வொருவரும், சிருஷ்டிக்கர்த்தாவாகிய அல்லாஹு தஆலாவை அறிந்து ஹகீகத்தை உணர்ந்து இபாதத்து செய்ய வேண்டியது அத்தியாவசியக் கடமை. இதற்கு இல்மு, ஒழுக்கம், ஈமான், இஸ்லாம், அமல், ஷரீஅத் முதலிய முஆமலாத்து களைத் தெரிந்து கொள்ள வேண்டியது முதற்பெரும் கடமையாகும்.

இந்த அறிய பெரிய நூலாகிய "நஸ்ஹுல் ஹதீது வபத்ஹுல் மஜீது" என்பது நமது நபிகள் நாயகம் ரஹ்மத் துல்லில் ஆலமீன் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவாய் மலர்ந்தருளிய ஹதீதுக ளென் னும் திருவாக்கியங்களைக் கொண்டும், ஸஹாபாக்கள், ஒலி மார்கள் ஸாலிஹீன்கள் நாதாக்களுடைய நஸீஹத்துகள், ஹிக்காயத்துகள் முதலிய உபதேச உபமேய ஆகமங்களை ஆதாரமாகக் கொண்டும், தீனுல் இஸ்லாத்தின் எல்லா மஸ்அலாக்களையும், விஷயங்களையும் தத்துவங்களையும் எடுத் தோதும் அற்புதமான நூலாகும். இந்த ஒரு கிதாபு மட்டும் கையில் யிருந்து விட்டால் தமிழ் முஸ்லிம்களுக்கு வேறெந்த கிதாபின் தேவையும் இராது. அதாவது இதில் இல்லாத விஷயமே இல்லையென்று சொல்லலாம். இதன் அருமை நேரில் பார்த்தாலே தெரிய வரும்.

இதன் விலை ரூ. 9-60

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# திருக் குர்ஆன் : : : : : : : : சார சங்கிரஹம்

பல விஷயங்கள் பற்றிய பல ஆயத்துகள்.

(ரஹ்மத் பாகவி)

## பாவிகளும் அல்லாஹ் உடைய ரஹ்மத்தை மறந் தொழிய வேண்டாம்

(நபியே நீர்,) உமது ஜனங்களை நோக்கி (இந்நன்மொழியை) என் புறத்தில் சொல் வீராக:—"ஏ என்னுடைய (நல்ல) அடியார் களே, (உங்களில்) யாராயினும் சரியே (அறிந்தோ அறியாமலோ பாவஞ் செய்திருந்தால்), தன் ஆத்மாவுக்கே அக்கிரமம் செய்திருந் தால், அல்லாஹ் உடைய ரஹ்மத்தை (பேரருளை) விட்டும் மனம் சோர்ந்து (மறந்தொழிந்து) இருந்து விட வேண்டாம். ஏனெனின் அல்லாஹ் (தஆலா இஷ்டப்பட்டு) நாடுவானானால் (அத்தகைய பாபிகளின்) சகல பாபங்களையும் மன்னித்து விடுவான். நிச்சய மாகவே அவன், பாவங்களை மன்னிப்பவனாகவே இருக்கிறான். எனவே, உங்களுக்கு (அதாபு என்னும்) வேதனை வருவதற்கு முன், உங்களுக்கு வேறு உதவி கிடைக்காமற் போகு முன், தங் களுடைய (அருள் மிகுந்த) இறைவன் பக்கம் (போய்)ச் சேர்ந்து கொள்வீர்களாக (இப்போதே) அவனுக்குக் கீழ்ப்படிந்து நடந்து கொள்வீர்களாக. (குர்ஆன் வேதத்தின் மூலம்) உங்களுக்கு, நல்ல நல்ல விஷயங்கள் அருள் புரியப் பட்டிருக்கின்றன. இதன் பிர காரமே நடந்து கொள்ளுங்கள். உங்கள் மீது திடீரென அதாபு (என்னும் வேதனை) வருவதற்கு முன்—அது எப்போது நிகழும் என்று உங்களுக்குத் தெரியாதிருக்கும் முன்பே—(சன்மார்க்கமாகிய) இதன்படி நடந்து கொள்வீர்களாக.

(ஜுஸுவு: பமன் அல்—லம; ஸூரா: ஜுமர்; ருகூ: 6)

## ஆகிரத்தில் பாவிகளுக்குக் கிடைக்கும் உணவும், தண்டனையும்.

(உலகம் முடிந்த பின்) ஆகிரத்தில், கட்டாயம், பாவிகளுக்கு (கொடிய தண்டனை யுண்டு;) அவர்களுக்கு (நெருப்புக்) கற்றாழை யின் செடிகளே உணவாக்கப்படும்; அவர்களுக்கு (தாகத்துக்கு) அளிக்கப்படும் தண்ணீரோ—தீயால் உருகி வழியும் செம்பு

குழம்பு போன்ற திரவம் தான்; இது வயிற்றுக்குள்ளும் போய் கொதித்து (தீங்கிழைத்து)க் கொண்டிருக்கும். அப்போது, இறைவன் புறத்திலிருந்து, நாகக்கிங்கர் (மலக்கு) களுக்கு (இவ்வாறு) உத்தரவு இடப்படும்:—இவர்களைப் பற்றிப் பிடியுங்கள்; இழுத்துச் செல்லுங்கள்; நரகத் தீயின் மத்தியில் கொண்டு போங்கள். அப்புறம் தலைகள் மீது கொதிக்கும் நீர் குழம்பை ஊற்றி, (கொடிய) தண்டனை கொடுங்கள். பிறகு (பாவியை நோக்கி இவ்வாறு) கூறப்படும்:—"இந்த வேதனையின் ருசியை (கொடுமையை) அனுபவி. இன்னும்; (உலகில்) உனக்குப் பெரிய மதிப்பும் படாடோபமும் இருந்ததல்லவா? அப்போது, (உனக்கு உபதேசித்த போது) நீ நம்பாமல் சந்தேகம் கொண்ட (நரக வேதனையாகிய) அது இது தான்" என்பதாகும்.

(ஜுஸு: இலாஹியுரத்து; ஸூரா: துக்கான்; ருகூ: 3.)

## கைம் மாற்று லேவா-தேவி

நீங்கள் செய்யும் வியாபாரத்தில் நேரடியான விவகாரமாக யிருந்தால், அல்லது கைம் மாற்று லேவா தேவியாக இருந்தால், இதை யெல்லாம் நீங்கள் எழுதி வைத்துக் கொள்ளாமல் போனால், (அல்லது எழுதி வாங்கிக் கொள்ளாமல் போனால் அதனால்) ஒன்றும் குற்ற மில்லை. (அதாவது, வர்த்தக முறையில் ரொக்க பேரத்தை எழுத்து மூலமாகச் செய்ய வேண்டிய அவசியமில்லை; நேரடியாக கைம்மாற்று கொடுப்பல்-வாங்கல் செய்து கொள்ளலாம் என்பது கருத்தாகும்.)

(ஜுஸு: தில்கர்ருஸுலு; ஸூரா: அல்பகரா; ருகூ: 39)

## கொடுப்பல்-வாங்கலில் சாக்ஷியம் அவசியம்

(முஸ்லிம்களே,) நீங்கள் உங்களுக்குள் பெருந் தொகையை (அல்லது பண்டமாற்றை) கொடுப்பல்—வாங்கல் செய்து கொண்டால் அதற்குச் சாக்ஷியம் ஏற்படுத்திக் கொள்ளுங்கள். இதனால் எழுதியவருக்கோ சாக்ஷியக் காரருக்கோ (விவகாரம் செய்பவருக்கோ) நஷ்டம் ஏதும் ஏற்படாதிருக்கட்டும். இங்ஙனம் நீங்கள் செய்யாமல் ஏறுமாறு செய்வீர்களாயின், இது விஷமத்தனமான செயலாகும். எனவே அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள். அல்லாஹு (தஆலா) எப்போதும் உங்களுக்குத் தூய்மையையே கற்பிக்கின்றான். அவன் எல்லாவற்றையும் அறிந்தவனாக இருக்கின்றான்.

(ஜுஸு: தில்கர்ருஸுலு; ஸூரா: அல்பகரா; ருகூ: 39)

## பிரயாணக் கால வியாபார முறை

(முஸ்லிம்களே,) நீங்கள் பிரயாணத்தில் இருக்கும் போது, (வியாபார விவகாரங்கள் செய்யவிருந்து) உங்களுக்கு 'எழுது பவர்' (கணக்கர்) கிடைக்காமற் போனல், அந்நிலையில் நீங்கள் கடன் வாங்கவேண்டி யிருந்தால், (இப்படிப் பட்ட சூழ்நிலைகளில்) ஏதேனு மொரு பொருளை ஈடு வைத்து (பணம்) கடன் வாங்கிக் கொள்ளுங்கள். (இவ்விஷயங்களில், எழுத்து மூலம் ஆதார மில்லா விடினும்) ஒருவரை ஒருவர் நம்பிக் கொள்ளுங்கள். எனவே, (ஜனங்கள் யார் மீது நம்பிக்கை வைக்கின்றார்களோ,) இன்னும் எவர் மீது நம்பிக்கை வைக்கப்படுகின்றதோ அவர், 'அமானத்' தார ராக (நேர்மை தவறாதவராக) நடந்து, அந்த அமானத்தை (உரியகாலத்தில்) திருப்பிக் கொடுத்து விடுவாராக. இன்னும் அல்லாஹ்வுக்குப் பயப்படுவாராக; அல்லாஹ்வே அவர்களுடைய இரக்ஷகன்.

(ஜுஸு: தில்கர்ருஸுலு; ஸூரா அல்பகரா; ருகூ: 39)

## லுக்மான் நபிக்கு அறிவு தரப்பட்ட விதம்.

(இறைவனாகிய) நாம், லுக்மானுக்கு அறிவாராய்ச்சியை (விவேகத்தை) அளித்தோம். இன்னும் "நீர் அல்லாஹ்வுக்கு ஷுக்ரு செய்விராக; ஒருவன் ஷுக்ரு செய்வதால், (உபகாரத்துக்கு நன்றி தெரிவிப்பதால்) அவன் அதனால் தனக்கே நன்மை செய்து கொள்கிறவனாக இருக்கிறான். எனவே எவன் (உபகாரத்துக்கு நன்றி தெரிவிப்பதில்லையோ) (ஷுக்ரு செய்வதில்லையோ அவன், தன்னுடைய நலத்தைத் தான் இழந்து விடுகிறான்.) அல்லாஹு தஆலா, (இப்படிப்பட்ட) அடியார்களுடைய ஷுக்ருக்காக (நன்றி யறிவுப்புக் காக) காத்துக் கொண்டிருக்க வில்லை. (தேவை யற்ற வனாக இருக்கின்றான்.) மேலும் அல்லாஹ் வாகிய அவனே சகல புகழுக்கும் உரியவனாக இருக்கிறான்" என்று நாம் அவருக்கு கட்டளை பிறப்பித்தோம். ஒரு சமயம் (அறிவாளியான ஹக்கீம்) லுக்மான், தன்னுடைய புதல்வரை (அருகில் அழைத்து) நோக்கி, "மகனே, நீ யாரையும் (எந்தப் பொருளையும்) அல்லாஹ்வுக்கு இணையானதாகச் செய்யாதே. ஏனெனின் ஷிர்க் செய்வது மகாக் கொடிய அக்கிரமமாகும்" என்று உபதேசம் செய்தார்.......

(ஜுஸு: உத்லு மாஊஹியா; ஸூரா: லுக்மான்; ருகூ: 2)

## லுக்மான் தன் மகனுக்குச் செய்த உபதேசம்

(விவேகியான) லுக்மான் (அலை,) தன்னுடைய (அருமை) மகனுக்குப் (பின் வருமாறு) உபதேசம் செய்தார்:—மகனே, நீ செய்யும் ஒரு காரியம் ஓர் அணுவத்தனை (சிறியதாக) இருந்த போதிலும், மேலும் அது கல்லுக்குள்ளோ, வானத்திலோ, பூமியிலோ எங்கு (மறைவானதாய்) இருந்த போதும், (மறைந்து புரிந்த போதிலும்) அல்லாஹு (தஆலா கியாமத்து நாளில், கணக்கில்)அதைக் கொண்டு வந்து சேர்த்து விடுகிறான். அல்லாஹு தஆலா, மிகவும் நுணுக்கமாக நோக்குபவனாகவும், விஷயம் அறிந்தவனாகவும் இருக்கின்றான். இன்னும் (கேள்:) என் மகனே, நீ தொழுகையை நிறைவேற்றி வருவாயாக. ஜனங்களுக்கு நற் காரியங்களைக் கொண்டு போதனை செய்வாயாக. தீய காரியங்களை விட்டும் தடுப்பாயாக. உமக்கு ஏதேனும் துன்பம் நேரிட்டால் அதைப் பொறுத்து (ஸப்ரு செய்து) கொள்வாயாக. ஜனங்களிடம் முகம் திருப்பி (அலக்ஷியம்) காட்டாதிருப்பாயாக. பூமியின் மீது காலடித்து (தலை நிமிர்ந்து அகந்தை யோடு) செல்லாதிருப்பா யாக. அகந்தையோடு தலை உயர்த்திச் செல்பவனை (அகப் பெருமைக்காரனை) அல்லாஹு (தஆலா) விரும்புவதே இல்லை. எப் போதும் (எந்த விவகாரத்திலும்) நடுத்தரத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்வாயாக (நேர்மையோடு நடந்து கொள்வாயாக.) (பேசும் போது) உன்னுடைய சப்தத்தை மிருது வாக்கிக் கொள்வாயாக. (கூச்சலிட்டு பேசக் கூடாது.) சப்தங்களி லெல்லாம் மிகக் கெட்டது. (சமய மறியாமல் கத்தும்) கழுதையின் குரலே யாகும். (பேசும் போது கத்துபவன் கழுதைக்குச் சம மாகிறான்.)

(ஜுஸு: உத்லு மாஊஹியா; ஸூரா: லுக்மான்; ருகூ: 2)

## எவருக்கு இரண்டு உள்ளம் கிடையாது.

அல்லாஹு (தஆலா மாந்தரில்) எவருடைய நெஞ்சத்திலும் இரண்டு ஹிருதயங்களை உண்டாக்கவில்லை. (எல்லோருக்கும் ஒரே உள்ளம் இருப்பதைப் போல், அவர்களுடைய நடத்தையும் ஒரே மாதிரியாய் தூய்மையாய் இருக்க வேண்டும். முஸ்லிம் களே,) நீங்கள் உங்கள் மனைவிகளில் ஒருத்தியை தாய் என்று சொல்லி விடுவதால் (நீ இனி எனக்குத் தாய் போலாவாய்) (என்று ஆணை யிட்டு விடுவதால்)—அவள் உங்களுடைய தாயாகி

விடமாட்டாள். (அப்படி கருதவும் கூடாது.) இவ்வாறே, நீங்கள் ஒரு யுவனை 'என் மகன்' என்று (வாயளவில்) சொல்லி விடுவதால் அவன் உண்மை மகனாகி விட மாட்டான்; (வளர்ப்புப் பிள்ளைவாஸ்தவப் பிள்ளையாக மாட்டான்), இஃதெல் லாம் உங்கள் வாய்ப்பேச்சு முறைமையே யாகும். அல்லாஹு (தஆலா) வாஸ்தவம் (உண்மை) யாதென்பதையே எடுத் தோதுகின்றான். அவனே அனைவர்க்கும் நல்ல மார்க்கத்தைக் காட்டு கின்றான்.

(இதில் பண்டை அரபிகளில் ஒரு மூட வழக்கம் கண்டிக் கப்பட்டிருக்கிறது; கோபத்தில், தன் மனைவியைப் பார்த்து 'நீ எனக்குத் தாயாக இருப்பாய்' என்று ஒரு முறை சொல்லி விட்டால், ஆயுள் முழுதும் அவளை விலக்கி விடுவார்கள்; ஒரு பையனை, தன் மகன் என்று சொல்லி விட்டால், அவனுடன் வேறு வகையில் உறவு கொள்ள மாட்டார்கள். இதெல்லாம் தகாத காரியங்கள் என்பது ஆண்டவன் கட்டளை.)

## வளர்ப்புப் பிள்ளை அவனது தந்தைக்கே உரியவனாவான்.

(முஸ்லிம்களே,) நீங்கள் உங்கள் வளர்ப்புப் பிள்ளையை, அவனுடைய சொந்த தகப்பனின் பெயரைக் கொண்டே குறிப் பிட்டு அழைப்பீர்களாக இதுதான் அல்லாஹ் (தஆலா) இடத்தில் நேர்மையான மார்க்கமாகும். அங்ஙனம் அந்தப் பிள்ளையின் தகப்பனாரின் பெயர் உங்களுக்குத் தெரியாமல் போனால், அவனை உங்கள் (இஸ்லாமிய) சகோதரனாகவும் நண்பனாகவும் பாவித்துக் கொள்ளுங்கள். இவ்விவகாரங்களில் நீங்கள் ஏதேனும் தவறு இழைத்து விட்டாலும், உங்கள் மீது பாப மொன்று மில்லை. ஆனால் வேண்டு மென்றே (மன முரணாக) நீங்கள் இக்காரியம் செய்தால் அது பாபமேயாகும். இந்நிலையில் அல் லாஹு (தஆலா) தான் உங்களை மன்னிப்பவனாக இருக் கின்றான்.

(ஜுஸ்உ: உத்லு மாஊஹிய; ஸூரா: அஹ்ஸாப்; ருகூ: 1)

187086

# பத்ஹுர் ரஹ்மான்
# பில்பிக்ஹின் னு:.மான்

(ஹனபி மதுஹபுக்குரியது)

பிரயோஜனமான கல்வி, பிரயோஜன மில்லாத கல்வி என்று இரண்டு வகை யுண்டு. உலக வாழ்வை மட்டும் நமக்கு எடுத்துச் சொல்வது பிரயோஜன மில்லாத கல்வி. நம் மனமும் ஒழுக்கமும் சீர்பெற்று மறுமையில் நமக்கு ஈடேற்றம் தரக்கூடியதே பிரயோஜனமான கல்வியாகும்.

தீனுல் இஸ்லாத்தின் தத்துவங்களையும், அனுஷ்டான ஒழுக்க முறைகள் என்னும் பிக்ஹு மஸ்அலாக்களையும் கற்றறிந்து அமல் செய்ய வேண்டியது ஒவ்வொரு முஸ்லிமுடையவும் கடமையாகும். இதுதான் இம்மை, மறுமை இரு லோகத்திலும் பிரயோஜனம் தரவல்லது.

இந்நூலில் ஒவ்வொரு முஸ்லிமும் அறிந்து ஒழுக வேண்டிய எல்லா விஷயங்களும் அடங்கி யிருக்கின்றன. உதாரணமாக ஈமான், இஸ்லாம், கலிமா, பரிசுத்தம், தொழுகை, ஜும்ஆ மகிமை, ஜியாரத்துல் குபூர், ஜக்காத்து, நோன்பு, ஹஜ்ஜு முதலிய மஸ்அலாக்களும், இஸ்லாமிய ஒழுக்கம், ஸுன்னத்தின் சிறப்பு, ஸபருடைய ஒழுக்கம் இபாதத்தின் மகிமை மற்றும் சகலவிதமான போதனைகளும் அடங்கி யிருக்கின்றன.

நல்ல சுத்த தமிழில் இனிய நடையில் எழுதப்பட்ட புதிய நூல்—புதிய பதிப்பு. ஆங்கு அரபு மொழியில் ஓத வேண்டிய கலிமா, துஆ முதலானவைகள் அறபிலேயும் அமைக்கப்பட்டுள்ளன. இதன் அருமை நேரில் பார்த்தால் தான் தெரியும்.

இதன் விலை ரூ. 3

ஷை அறபுத் தமிழ் அல்பத்ஹுர் றப்பானி-பி-பிக்ஹே நிஃமானி

இதன் விலை ரூ. 5

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# கண்ணால் பார்ப்பதும் பொய்

(ஒரு கற்பனைக் கதை)

ஹாரிஸ் பாபு

அவன் ஆபிசிலிருந்து தன் இருப்பிடத்துக்குத் திரும்பிக் கொண்டிருந்தான், சைக்கிளில். அவனது ஒரு கையில் 'தெய்வீகக் காதல்' என்ற கதைப் புத்தகம் ஒன்று இருந்தது. அது அவனுடைய சொந்த கற்பனைச் சிருஷ்டிகளில் ஒன்று. ஆம் அவன் ஒரு ஆபிஸ் குமாஸ்தா மட்டுமல்ல, சிறந்த எழுத்தாளன் கூட; பெயர் மனோஹரன்.

தான் போக வேண்டிய திருப்பத்தில் சைகிலைத் திருப்பிய மனோஹரன் ஒரு வினாடி திகைத்துச் செயலற்றுப் போய் விட்டான். பிறகு சமாளித்துக் கொண்டு சைகில் பிரேக்கை அழுத்திப் பிடித்தான். முயற்சி வீண் தான். அந்தப் பாழும் சைகில், எதிரில் கட்டுப் புத்தகங்களை மார்போடு அணைத்து வந்து கொண்டிருந்த பெண் மீது மோதாமல் நிற்க வில்லை.

எதிர் பாரா விதமாக நடந்து விட்ட அந்நிகழ்ச்சி மனோஹரனைப் பெரிதும் அதிர்ச்சியுறச் செய்தது. ஆண் பிள்ளையாக இருந்தாலும் பரவாயில்லை. இனத்திலே பெண்; அதுவும் பணக்கார வீட்டுப் பெண் போல் தோன்றுகிறாள். என்னென்ன வசை பாடுவாளோ!

அச்சத்துடன் அவளைப் பார்த்தான். கோபத்தால் அவள் முகம் சிவந்திருந்தது.

"என் சார்! உங்களுக்குப் பகலிலே கண் தெரிவதில்லையோ? உங்கள் சாம்ப்பியன்—தனத்தைக் காட்ட எந்தக் குட்டிச் சுவரும் கிடைக்கவில்லையா?" ஆத்திரம் தீரக் கேட்டு விட்டதாக நினைத்தாள் அந்நங்கை. ஆனால் மறு கணம், 'உதடுகள் அசைந்தனவே தவிர வார்த்தைகள் வெளிவரவில்லை' எனத் தெரிந்ததும் வெட்கமுற்றுத் தலை குனிந்தாள்.

அவள் நிலையைக் கண்ட அவனுக்குச் சிரிப்பு பொங்கிக் கொண்டு வந்தது. ஆனால் அதைச் சாமர்த்தியமாக அடக்கிக் கொண்டு, சிதறிக் கிடந்த புத்தகங்களைப் பொறுக்கி எடுத்து அவள் பக்கம் நீட்டினான். ஏதோ கூற முயன்றான். முடியவில்லை. ஏனோ?

நாணமும், அவமானமும் அவளைத் துரத்தின. அவன் கையிலிருந்த புத்தகக் கட்டை வெடுக் கெனப் பிடுங்கிக் கொண்டு வேகமாக நடந்தாள் அவ்வனிதை.

சின்ன எஜமானி அம்மாவா? அப்போ இவள் வேலைக்காரியாக இருக்க வேண்டும். உள்ளே செல்ல அவன் கால்கள் துடித்தன ஆனால் ஏனோ தயங்கினான்.

அவன் தயங்குவதைக் கண்ட அவ்வேலைக்காரி, "பரவாயில்லை, சும்மா வாங்க!" என்று கூறி ஒரு மாதிரியாக நகைத்துக் கொண்டே திரும்பி நடந்தாள். தன்னாலே அவனது கால்கள் அவளைப் பின் தொடர்ந்தன.

தங்கப் பதுமைபோல் வீற்றிருந்த அவள்—அவன் மனத்தைக் கவர்ந்தமங்கை நல்லாள்—எழுந்து தம் பூக்கரங்களைக் குவித்து நமஸ் கரித்து விட்டு "உட்காருங்கள்" என்றாள் மெல்லிய இனியக் குரலில். அவன், அவளுக்குப் பதில் வணக்கம் செலுத்தி, விட்டு எதிரே கிடந்த சோபாவில் அமர்ந்தான். பிறகு அவளும் தன் ஆச னத்தில் அமர்ந்து கொண்டாள்.

"நேற்று........."

அவள் ஏதோ கூற ஆரம்பித்தாள். உடனே, "ஆமாம். நேற்று எதிர் பாராத விதமாய் அந்தச் சம்பவம் நிகழ்ந்து விட்டது. மன்னிப்புக் கூடக் கேட்கவில்லை நான்......" என்று இழுத்தான் அவன்.

"பரவாயில்லை........"

"உங்களுக்குக் காயம் ஏதாகிலும் பட்டதா?"

"அதெல்லாம் ஒன்றுமில்லை" என்று நாணிக் கொண்டே கூறி விட்டு ஓரக்கண்ணால் அவனைப் பார்த்தாள். அவன் அவளையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு வெட்கமுற்று தன் பார் வையை வாபஸ் வாங்கிக் கொண்டாள். அதற்குள், காப்பி தம்ள ரைத் தட்டில் வைத்துக் கொண்டு வந்து அவர்கள் எதிரே இருந்த மேஜை மீது வைத்து விட்டுச் சென்றாள் வேலைக்காரி.

தட்டிலிருந்த தம்ளரை எடுத்து அவன் பக்கம் நீட்டினாள். "சாப்பிடுங்கள்" குரலில் கனிவும், பரிவும் கலந்திருந்தன. "நீங்கள் சாப்பிட வில்லையா?" என்று மரியாதைக்குக்கூட அவன் கேட்க வில்லை. அவள் கையால் வாங்கிப் பருகுவது ஒரு பாக்கியமாகக் கருதி அதை வாங்கிக் கொண்டான். தேவாமிர்தம் போல் இருந்தது. காபியின் ருசியையும், அவள்முக அழகையும் ரசித்துக் கொண்டே கேட்டான்: "உங்கள் பெயர் என்ன?"

"சந்திரா"

"சந்திரா. எவ்வளவு பொருத்தமான பெயர்?" தனக்குத் தானே கூறிக் கொண்டான். அதைச் செவியுற்ற சந்திராவின் சிவந்த முகம் மேலும் சிவந்தது.

"நீங்கள் என்னை அழைத்த காரணம்?" அவன் கேட்டான்.

"சொல்கிறேன். ஆனுல் நீங்கள் முதலில், 'நீங்கள், உங்கள்' என்று என்னைப் பன்மையில் குறிப்பிடுவதை 'நீ, உன்' என்று மாற்றுங்கள்" என்ருள் சந்திரா.

"சரி, அப்படியே! நீங்கள்—இல்லை இல்லை—நீ ஏன் என்னை கூப்பிட்டாய்?" என்று சிரித்துக் கொண்டே கேட்டான்.

"அதைத்தான் ஆரம்பத்தில் சொல்ல வந்தேன். ஆனுல் நீங்கள் இடை மறித்து கடந்து போன சம்பவத்தைப் பற்றி பேச ஆரம்பித்து விட்டீர்கள்......நேற்று உங்கள் புத்தகம் ஒன்று என் புத்தகங்களுடன் சேர்ந்து வந்து விட்டது. அதை உங்கள் அனுமதி இல்லாமலே படித்து விட்டேன்......"

"அதற் கென்ன பரவாயில்லை"

"அது உங்களுக்கு அவசரத் தேவையாக இல்லா விட்டால் முழுதும் படித்து விட்டுத் தரலா மென்று நினைக்கிறேன்"

"அவசரம் ஒன்று மில்லை. முழுதும் படித்து விட்டுத் தான் கொடு".

"அந்தக் கதைப் படிக்கப் படிக்க ரொம்ப சுவாரசியமாக இருக் கிறது. ஆவலைத் தூண்டும் அடுக்கடுக்கான சம்பவங்களுடன் புதுப் புதுக் கருத்துக்களைப் புகுத்திக் கதையை வெகு அழகாக அமைத்திருக்கிறீர்கள்—நீங்கள்"

"நாஞு?" அவன் திகைத்தான். "ஏற்கனவே என்னை உனக்குத் தெரியுமா?"

"தெரியும். ஆனுல் நீங்கள் யார் என்று நான் தெரிந்து கொண்ட பின் உங்களைப் பார்ப்பது இதுதான் முதல் தடவை"

"ஏன், நேற்றுக் கூட.. ......"

"நேற் றென்ன, இதற்கு முன் பல முறை பார்த்திருக்கிறேன். ஆனுல் அப்பொழு தெல்லாம் நீங்கள் தான் எழுத்தாளர் மனோஹர் என்பது எனக்குத் தெரியாது"

காலி தம்ளரை மேஜைமீதிருந்த தட்டில் வைத்து விட்டு, "இப்பொழுது எப்படித் தெரிந்தது?" என்ருன் மனோஹரன்.

"தற்போது என்னிட மிருக்கும் 'தெய்வீகக் காதல்' என்னும் கதைப் புத்தகத்தில், அதன் ஆசிரியரின் புகைப்படம் அச்சிடப் பட்டிருக்கிறது அல்லவா? அதைப் பார்த்ததும் எங்கோ பார்த்த முகம் மாதிரி தோன்றியது. யோசித்தேன். அப்பொழுது, என் மீது சைகிலை மோதவிட்ட நீங்கள் என் நினைவிற்கு வந்தீர்கள். உடனே உங்கள் உருவத்தை என் மனக் .கண்முன்னே கொண்டு

வந்து நிறுத்தி அந்தப் படத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தேன். சிறிதும் வித்தியாச மில்லை. 'இவர், அவரேதான்' என்று தீர் மானித்துக் கொண்டேன்'' என்று கூறி விட்டு முல்லைச் சிரிப்பைச் சிதற விட்டாள் சந்திரா. அவனும் அவள் சிரிப்பில் கலந்து கொண் டான்.

''வீட்டில் வேறு யாரையும் காணவில்லையே?'' மனோஹரன் கேட்டான்.

''அப்பா ஆபிசுக்குப் போய் இருக்கிறார். உறவினர்களில் கல்யாண மென்று அம்மா பக்கத்து ஊருக்குப் போய் இருக்கா'' என்றாள் சந்திரா.

''உனக்கு சகோதர சகோதரிகள்........''

''இல்லை. பெற்றோர்களுக்கு நான் ஒரே குழந்தை!'' அதற்கு முன் என்றும் சந்தித்துப் பேசியறியாத அவ்விருவரும் சின் னேரத்தில் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு, பல நாள் பழகியவர்களைப் போல் மனந்திறந்து வார்த்தைகளாடிக் கொண் டிருந்தனர். சுவற்றில் மாட்டியிருந்த கடிகாரம் ஐந்து முறை அலறி விட்டு ஓய்ந்தது.

''மை காட்! நான் வந்து ரொம்ப நேரமாகி விட்டிருக்கு'' இருக்கையை விட்டெழுந்தான், மனோஹரன். ஆனால் அவளைப் பிரிந்து செல்ல அவனுக்கு மனமில்லை என்றாலும் என்ன செய் வான்? தன் எஜமானனைச் சந்தித்துப் பேச வந்த அவன் 'சின்ன எஜமானியம்மா' வுடன் பேசிக் கொண்டிருந்தால், முடியுமா?

''உங்கள் விலாசம் கொடுங்கள், கதை முழுவதும் படித்தான வுடன் புத்தகத்தை அனுப்பி விடுகிறேன்'' என்றாள் சந்திரா.

''அந்தப் புத்தகத்தை நீயே வைத்துக் கொள். என் விலாசம், பதினேழு, எம். எல். ஏ. வீதி,'' என்றான் மனோஹரன்.

''என் சினேகிதை கூட அதே வீதியில் தான் வசிக்கிறாள்''

''ரொம்ப நல்லதா போனது. உனக்கு சிரமம் இல்லை யென்றால் உன் சினேகிதையின் வீட்டுக்கு வரும்போது இந்த ஏழையின் வீட்டு மண்ணையும் மிதித்துச் செல்லும் படி வேண்டுகிறேன்!'' என்றான் நாடகபாணியில்.

(தொடரும்)

187086

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அருமைப் புதல்வியாகிய

# பாத்திமா நாயகி (ரலி) ஜீவிய சரித்திரம்

இச்சரித்திரத்தில் ஹஜ்ரத் பாத்திமா நாயகி அவர்களின் மாதாவாகிய உம்முல் மூஃமினீன் கதீஜா நாயகி அவர்களின் வம்ச பரம்பரையும், அவர்களின் பிறப்பும், பாத்திமா நாயகியின் பிறப்பும், பால்யகால அறிவும், பரஸ்பர அன்பும், நாயகியின் திருக்கலியாணமும், அவர் தம் வீட்டில் குடித்தனம் நடத்தி வந்த ஒழுங்கும், தனது பர்த்தாவாகிய அலியாருக்கு இணங்கி நடந்த அழகும், அவர்களின் தயாள சிந்தையும், உழைப்பும், ஆண்டவன் மீது பக்தியும், வணக்கமும், கபூலாக்கப்பட்ட துஆவும், ரஸூலுல்லாவுக்கு பாத்திமா நாயகியின் பால் இருந்து வந்த அன்பும், நாயகிக்கு தம் தந்தையின் பால் இருந்து வந்த பிரியமும் அவர்களின் நாணம், அடக்கம், அச்சம் முதலிய ஒழுக்கங்களும், இமாம் ஹஸன் ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹுமா அவர்களின் மேம்பாடும், நாயகியின் வபாத்தும் விபரமாய்க் கூறப்பட்டிருப்பதுடன் இந்நாயகியின் ஜீவிய சரித்திரத்தில் நம் சகோதர சகோதரிகளுக்கு அரிய போதனைகளும் அடங்கி யிருக்கின்றன. ஒவ்வொரு முஸ்லிமும் இச்சரிதையை வாசித்துணர வேண்டியது மிக்க அவசியமாகும்.

கிளேஸ் காகிதம் இதன் விலை ரூ. 1-60
ஷை அறபுத் தமிழ் விலை ரூ. 3-00

கிடைக்குமிடம் :—
ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதரூஸ் 5.

# தப்ஸீறுல் ஹமீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத்.

மெது காயகம் (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட திருக் குர்ஆனே உலக மக்கள் அனைவருக்கும் பொது வேதமாகவும், இஸ்லாம் மார்க்கத்திற்கு ஆதாரமாகவும் இருந்து வருகிறது. முஸ்லிம்கள் இஸ்லாம் மதத்திற்கு ஆதாரமாயுள்ள திருக்குர்ஆனின் கட்டளைகளையும் அரிய போதனைகளையும் தெரிந்து கொள்வது அவசியமாகும். இஃது திருக்குர்ஆனின் தப்ஸீரை தமிழ் பாஷையில் ஸுன்னத்து வல் ஜமாஅத்தின் உலமாக்களாலும் இமாம்களாலும் எழுதப்பட்ட தப்ஸீர்களை ஆதாரமாகக் கொண்டு, எழுதப்பட்டது.

இந்த தப்ஸீரில் குர்ஆன் ஆயத்துகளை அறபியில் அழகாக எழுதி போட்டோபிளாக் செய்யப்பட்டு தனித்தனியாக ஆங்காங்கு அமைத்தும் அதன் கீழ் சரியான தர்ஜுமாவும், தப்ஸீர் என்னும் விரிவுரையும், வியாக்யானமும், ஷஃனு நுஸூல் என்னும் ஒவ்வொரு ஆயத்தும் இறங்கிய காரணங்களும், அதற்கேற்ப ஹதீது, ரிவாயத்து, ஹிக்மத்து, பாயிதா, கிஸ்ஸா, அஜீபா முதலிய அரும் பெரும் ஆதாரங்களும் ஒருங்கே சேர்த்து அமைக்கப் பெற்றிருக்கின்றன.

**முதல் பாகம்:** ஸூறத்து பாத்திஹா—பகறுவிலிருந்து ஸூறத்துன்னிஸா முடிய (ஒரு மன்ஸில்) 5¼ ஜுஸு வரை விலை ரூ. 10

**இரண்டாம் பாகம்:** ஸூறத்துல் மாயிதா முதல் ஸூறத்துத் தவ்பா முடிய விலை ரூ. 10

**மூன்றும் பாகம்:** ஸூறே யூனுஸ் முதல் ஸூறத்துக் கஹ்ல் முடிய 7-ஸூறுக்களின் தப்ஸீர் விலை ரூ. 10

**நான்காம் பாகம்:** ஸூரத்துல் இஸ்ராஉ முதல் ஸூறத்து நூர் முடிய 8-ஸூராக்களின் தப்ஸீர் விலை ரூ. 10

**ஐந்தாம் பாகம்:** ஸூறத்து புர்க்கான் முதல் ஸூறத்து யாஸீன் முடிய 12-ஸூராக்கள். விலை ரூ. 12

**ஆறும் பாகம்:** ஸூறத்து ஸாப்பாத் முதல் ஸூறத்து ஹுஜ்ராத் முடிய 13-ஸூராக்கள். விலை ரூ 12

**ஏழாம் பாகம்:** சூறே காப் முதல் ஸூறத்து நாஸ் வரை 41-ஸூறுக்கள் விலை ரூ. 16

---

**ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,**
நெ 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.